# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● டிசம்பர் 04, 2021

Weekly E-paper ● December 04, 2021




## நூற்றுக்கு நூறு !

மா.உதயகுமார்

## பார‘தீய’ ஜனதா கட்சியும் ஜனநாயகமும்

பொள்ளாச்சி மா. உமாபதி

## அணை பாதுகாப்புச் சட்டம் !...?

தலையங்கம்

## திரும்பத் திரும்பத் திராவிடம் பேசுவோம்

நூல் அறிமுகம் - வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2052 ● டிசம்பர் 04, 2021 Weekly E-paper ● December 04, 2021



# நூற்றுக்கு நூறு !

மா.உதயகுமார்



தமிழ்நாடு அரசின் அனைத்துப் பணியிடங்களிலும், 100% தமிழக இளைஞர்களையே நியமிக்கும் பொருட்டு, அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ்த் தாளை அறிமுகப்படுத்தி அரசாணை வெளியிடப் பட்டிருக்கிறது. கடந்த ஆட்சியில் வெளிமாநிலத்தவர் அரசுப் பணிகளில் சேர்ந்த நிலையில், அதைத் தடுக்கும் வகையில் இந்த அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது.

“தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணி இடங்கள் அனைத்திலும் தமிழ் இளைஞர்களை 100% நியமனம் செய்யும் பொருட்டு தேர்வுகள் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தமிழ் மொழி பாடத்தால் தகுதித் தேர்வு கட்டாயமாக்கப்படும்” என்கிற அரசாணையைத் தமிழக அரசின் மனித வள மேலாண்மை மத் துறை வெளியிட்டிருக்கிறது.



சுருக்கம்

பொதுப்பணிகள் - நேரடி நியமனங்கள் - 2021-2022-ஆம் ஆண்டிற்கான மனிதவள மேலாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களால் சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு - தமிழ்நாடு அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழக இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தாளினை அறிமுகம் செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

மனிதவள மேலாண்மை (எம்) துறை

அரசாணை (நிலை) எண்.133

நாள். 01.12.2021
பிலவ வருடம், கார்த்திகை -15,
திருவள்ளுவர் ஆண்டு 2052.

படிக்கப்பட்டது

1. அரசுக் கடித எண்.18084/எம்2/2021, மனிதவள மேலாண்மை (எம்) துறை, நாள் 06.08.2021 மற்றும் 20.10.2021.
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3, கடித எண்.5476/பிடி.எ.ஆர்ஒ/2018, நாள் 28.10.2021 மற்றும் 25.11.2021.

ஆணை:

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களால் 13.09.2021 அன்று நிகழ்த்தப்பட்ட 2021-2022-ஆம் ஆண்டிற்கான மனிதவள மேலாண்மைத் துறையின் மானியக் கோரிக்கை தொடர்பான உரையின் போது, பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழக இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தமிழ் மொழி பாடத்தாள் தகுதித் தேர்வாக கட்டாயமாக்கப்படும்"

2. மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அவர்களின் மேற்குறிப்பிட்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளர் அரசுக்கு அளித்த கருத்துருவின் அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தெரிவு முகமைகளால் (Recruiting Agencies) அரசுப் பணிகளுக்காக நடத்தப்படும் போட்டித்

..2

தேர்வுகளில், பொது ஆங்கிலத்தாள் நீக்கப்பட்டு, பொது தமிழ்மொழித் தாள் மட்டுமே மதிப்பீட்டுத் தேர்வாக அமைக்கப்படும்.

..3

தேர்வுக் குழுமம் உள்ளிட்ட மாநிலத்தில் உள்ள இதர தெரிவு முகமைகளைப் ...

..4

திராவிட இயக்க அரசியலால், சமூக நீதியால் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி, தமிழர்களுக்குப் பயன்படாது பிற மாநிலத்தவருக்குப் பறிபோகும் நிலையைத் தடுத்து நிறுத்தும் போரைத் திமுகழக அரசு தொடுத்திருக்கிறது.

தமிழர் உரிமைகளை, கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த அதிமுக, நிலைநாட்டத் தவறியதால் ஏற்பட்ட பின்னடைவு இந்த ஆட்சியில் சரி செய்யப்படுகிறது.

இதே போல் பெருகிவரும் தனியார் துறைகளிலும், தமிழக அரசு இங்கே கொண்டு வர இருக்கும் தொழில் முதலீடுகள் மூலம் உருவாக இருக்கும் புதிய வேலைவாய்ப்புகளிலும், தமிழ் இளைஞர்களுக்குப் பெரும்பான்மை இடம் கிடைப்பதை உறுதி செய்யும் வகையிலும் அரசு செயல்படும் என்கிற நம்பிக்கையும் மேலெழுகிறது.

அதேபோல் மத்திய அரசின் நிறுவனங்களில் குறிப்பாக, நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தில்(NLC), தமிழர்கள் புறக்கணிக்கப்படும் நிலை மாறி அங்கும் தமிழ் இளைஞர்களுக்குப் பணியிடங்கள் உறுதி செய்யப்படும் என்ற நம்பிக்கையையும் இந்த அரசாணை ஏற்படுத்துகிறது.

நீதிக்கட்சி தொடங்கி, தந்தை பெரியார், கல்வி வள்ளல் காமராசர், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரைத் தொடர்ந்து திராவிட இயக்கத்தின் நீட்சியாக , தமிழர் உரிமைகளைப் பாதுகாக்கும் அரணாக இருக்கிறார், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அவரை அனைத்துத் தமிழர் இல்லங்களிலும், கட்சி வேறுபாடின்றி இன்று மக்கள் கொண்டாடுகின்றனர்! ●

# பார‘தீய’ ஜனதா கட்சியும் ஜனநாயகமும்

பொள்ளாச்சி மா. உமாபதி

உலகில் உள்ள ஆட்சி முறைகளில் ஆகச்சிறந்த ஆட்சி முறை மக்களாட்சி என்னும் ஜனநாயகம்தான். மன்னராட்சி, சர்வாதிகார ஆட்சி, கம்யூனிச ஆட்சி, ராணுவ ஆட்சி போன்ற ஆட்சி முறைகளில் மக்களுக்காக இயற்றப்படும் சட்டங்கள் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப் படுகின்றன. பலதரப்பட்ட பார்வைகளும், கருத்துகளும், வித்தியாசமான கோணங்களும் அங்கு விவாதிக்கப் படுவதில்லை. ஆனால் ஜனநாயகத்தில் மட்டும் ஒவ்வொரு சட்ட முன்வரைவும் நீண்ட நெடிய விவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டுப் பல்வேறுக் கருத்துகளும் முன்வைக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப் படுகின்றன.

அப்படிப்பட்ட விவாதங்கள் நடைபெறும் நாடாளுமன்றம்தான் ஜனநாயகத்தின் உயர்பீடம். அங்கு ஒவ்வொரு சட்ட முன்வரைவும் தாக்கல் செய்யப்பட்டு, நீண்ட விவாதங்கள் நடத்தப்பட்டு, பல்வேறு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துகளைக் கேட்டு, திருத்தங்களைச் செய்த பின்னர் வாக்கெடுப்பு நடத்தி, அதை நிறைவேற்றி குடியரசுத் தலைவருக்கு அனுப்பி அவரது ஒப்புதல் பெற்றுத்தான் சட்ட வடிவம் பெறுகின்றது.

பார”தீய” ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர், குறிப்பாக நரேந்திர மோடி இரண்டாம் முறையாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னால் அந்த மக்களாட்சி மாண்புகள் அனைத்தும் புதைகுழிக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இந்திய ஒன்றியத்தின் தலைமை அமைச்சரான நரேந்திரமோடி உலகம் சுற்றி உல்லாசப் பயணம் போவதிலும் விதவிதமான விலை உயர்ந்த உடைகளை உடுத்துவதிலும் காட்டும் ஆர்வத்தை நாடாளுமன்றத்திற்கு வருவதிலும், விவாதங்களில் பங்கேற்பதிலும் காட்டுவதில்லை.

ஒரு நாளும் இல்லாத திருநாளாக இம்முறை நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் தொடங்குகின்ற நேரத்தில் ஒன்றிய தலைமை அமைச்சர் மோடி, “எந்தப் பிரச்சினை குறித்தும் விவாதம் நடத்தத் தயார்!” என்று கூறினார். ஆனால் வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறும் சட்ட முன்வரைவை எந்தவித விவாதத்துக்கும் உட்படுத்தாமல் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றினார். “எந்தப் பிரச்சினை குறித்தும் விவாதம் நடத்தத் தயார்” என்ற மோடியின் அறைகூவலுக்கு என்ன பொருள் என்று அவர்தான் விளக்க வேண்டும்.

மோடி இரண்டாம் முறை ஆட்சிப் பொறுப்பேற்ற பின் இதுவரையில் 6 நாடாளுமன்றக் கூட்டத் தொடர்கள் நடைபெற்றுள்ளன. அதில் 42 சட்ட முன்வரைவுகள் வெறும் 30 நிமிடங்களிலும் 19 சட்ட முன்வரைவுகள் பத்து நிமிடங்களிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. கடந்த கூட்டத் தொடரிலும் 15 சட்ட முன்வரைவுகள் நிறைவேற்றப்பட்டன. அவை அனைத்தும் பத்து நிமிடங்களில் நிறைவேற்றப்பட்டன. இது தவிர 26 சட்ட முன்வரைவுகள் வெறும் அரை மணி நேரத்திற்குள் நிறைவேற்றப்பட்டன.

மழைக்கால கூட்டத்தொடரில் பத்து நிமிடங்களுக்குள் நிறைவேற்றப்பட்ட 14 சட்ட முன்வரைவுகளில்-

**“ இல்லாத 2ஜி சிக்கலை முன்வைத்து ஒரு இமாலயத் தொகை ஊழல் நடந்ததாகக் கூறி அன்றைய கூட்டத் தொடர்களை நடத்தவிடாமல் அழிச்சாட்டியம் செய்த சத்தியசீலர்களான பாஜகவினர், இன்று விவாதம் நடத்த நியாயம் கேட்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தற்காலிகமாக நீக்கி வைப்பது மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன் குடம் என்பது போல் உள்ளது. ”**

1.விரிவான விவாதம் நடத்த வேண்டிய பொதுக் காப்பீட்டுத் திருத்தச் சட்ட முன்வரைவு.

2.வங்கி மோசடி மற்றும் திவால் திருத்தச் சட்ட முன்வரைவு 5 நிமிடங்களிலும்,

3.தீர்ப்பாயத் திருத்தச் சட்ட முன்வரைவு 9 நிமிடங்களிலும்,

4.வரிவிதிப்பு சட்டம் தொடர்பான சட்ட முன்வரைவு 6 நிமிடங்களிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பொதுக் காப்பீட்டுச் சட்ட முன்வரைவை நிலைக் குழுவுக்கு அனுப்ப எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. ஆனால் 22 நிமிடங்களில் அந்தச் சட்ட முன்வரைவு நிறைவேற்றப்பட்டு சட்டம் ஆகிவிட்டது.

அதிமுக்கியத்துவம் வாய்ந்த சட்ட முன்வரைவு கூட அப்படியே விவாதம் இன்றி நிறைவேற்றப்படுகின்றது. இது ஜனநாயகத்திற்குப் பெரும் கேடு. விவாதங்களும் கருத்துப் பரிமாற்றங்களும்தான், ஜனநாயகத்தின் மூச்சுக்காற்றாகும். அவை மறுக்கப்படும்போது அதற்குப் பெயர் ஜனநாயகம் அல்ல; சர்வாதிகாரம். நீண்ட விவாதங்கள் இன்றி சட்டங்கள் நிறைவேறுவது குறித்து உச்சநீதிமன்றமே தன் கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

ஏன் விவாதங்கள் இல்லை என்று கேட்டால் ஒன்றிய அரசுத் தரப்பில் சொல்லப்படும் காரணங்கள் மிகவும் வேடிக்கையானவை. வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறவேண்டும் என்பதுதான் அரசின் விருப்பம். எதிர்க்கட்சிகளின் நோக்கமும் அதுவாகவே இருப்பதால் அதில் விவாதிக்க என்ன இருக்கிறது, எனவே விவாதம் தேவையில்லை என்கிறார்கள். அதே வேளாண் சட்டங்களை நிறைவேற்றும்போது அரசுத் தரப்பும் எதிர்த் தரப்பும் நேர் எதிரான கருத்துகளைக் கொண்டிருந்தன. அப்போதும் விவாதம் நடத்தப்படவில்லை. எது எப்படி இருந்தாலும் நாடாளுமன்றத்தில் விவாதங்கள் நடைபெறாது என்பதுதான் பாஜக அரசின் நடைமுறை ஆகிவிட்டது. விவாதங்கள் இல்லாத நாடாளுமன்றம் சுவாசம் இல்லாத மனிதனுக்குச் சமம்.

இது போதாதென்று, கடந்த மழைக்காலக் கூட்டத்தொடரில் விவாதங்களுக்கு இடம் கொடாமல் எதேச்சதிகாரம் ஆக நடந்துகொண்ட மாநிலங்களவைத் தலைவரைக் கண்டித்து அவரது மேசையின் முன் வந்து நியாயம் கேட்ட 12 எதிர்க்கட்சி உறுப்பினர்கள், இப்போது கூட்டத்தொடர் முடியும் வரை கூட்டத்தொடரில் பங்கேற்க முடியாதவாறு விலக்கி வைக்கப்பட்டுள்ளனர்.

இல்லாத 2ஜி சிக்கலை முன்வைத்து ஒரு இமாலயத் தொகை ஊழல் நடந்ததாகக் கூறி அன்றையக் கூட்டத் தொடர்களை நடத்தவிடாமல் அழிச்சாட்டியம் செய்த சத்தியசீலர்களான பாஜகவினர், இன்று விவாதம் நடத்த நியாயம் கேட்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களைத் தற்காலிகமாக நீக்கி வைப்பது மாமியார் உடைத்தால் மண்குடம்; மருமகள் உடைத்தால் பொன் குடம் என்பது போல் உள்ளது.

எதேச்சதிகார மதவெறி பாஜகவிடம் ஜனநாயகத்தை எதிர்பார்ப்பது ‘எருக்கன் செடியில் ரோஜா பூ பூக்கும்’ என்று எதிர்பார்ப்பது ஆகும். ●

# இனப்பகை வீழ்த்த வந்த இடிமுரசு!

●வெற்றிச்செல்வன்



மடமைதான் மிகுந்து, மூளை
அடிமையாய்க் கிடந்த போது
விடம்நீக்கும் மருந்தாய் வந்த
பெரியாரின் வழித்த டத்தில்
அடலேறு போலே நாளும்
சுயமரி யாதை என்னும்
சுடரினை அணைந்தி டாது
சுமந்திடும் கொள்கை வீரர்!

குடுமிகள் அஞ்சும்! கொள்கைச்
சூரியன் வைத்த தீயும்
சுடுமெனத் தூர ஓடும்!
திராவிடர் வீட்டில் நாளும்
கெடுதலைச் செய்யப் பூணூல்
உடையவர் நினைக்கும் போது
விடுதலை என்னும் ஏடு
வேலியாய்க் காத்து நிற்கும்.

இந்திய தேசம் என்னும்
பேரிலே இந்த நாட்டில்
இந்துக்கள் தேசம் கட்டி,
திராவிடர் உரிமைக் கெல்லாம்
நந்திபோல் நடுவில் வந்த
நச்சினை மாய்க்கும் போர்வாள்
வந்ததே எனம கிழ்ந்து
வாழ்த்துவோம் நீடு வாழி!

இனப்பகை வீழ்த்த வந்த
இடிமுர(சு) எங்கள் வாழ்வின்
மனத்துயர் போக்க வந்த
மானமிகு! ஒடுக்கப் பட்டோர்
கனவெல்லாம் நிகழ்த்திக் காட்டும்
காட்டாறு! திராவி டர்க்கோ
இனமானம் காத்து நிற்கும்
இனமுரசு! வாழ்க! வாழ்க!

## அரசாணைகள், கருத்துரைகள், படிவங்கள் தமிழில் இருக்க வேண்டும்! அனைத்துச் செயலாளர்கள் கூட்டத்தில் தமிழ்நாடு அரசு அறிவுறுத்தல்





கடந்த நவம்பர் 6, 2021, நமது கருஞ்சட்டைத் தமிழர் இதழில் ‘இந்தித் திணிப்பை அனுமதிக்கலாமா இனமான அரசு?’ என்ற தலைப்பில், அரசுத் துறையின் கடிதம் ஒன்றில், தமிழ் பயன்படுத்தப்படாமல், ஆங்கிலம், இந்தி பயன்படுத்தப்பட்டது குறித்து செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

தற்போது, கடந்த 22.11.2021 அன்று நடைபெற்ற அனைத்துத் துறைச் செயலாளர்கள் கூட்டத்தில், அமைச்சர்களுக்கு அனுப்பப்படும் சுற்றாணைக் குறிப்புகள், அரசாணைகள், அரசு அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் கருத்துரைகள், பயன்படுத்தப்படும் படிவங்கள் ஆகியவை அனைத்தும் தமிழிலேயெ இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது (பார்க்க படம்).

மேலும், 02.11.2021 நாளிட்ட அரசாணையிலும், அரசு விடுமுறை நாட்கள் பட்டியலில், ஏப்ரல் 14, தமிழ்ப் புத்தாண்டு நாளாகக் குறிப்பிடப்பட்டிருந்ததைத் தலையங்கம் சுட்டிக்காட்டியிருந்தது (நவம்பர் 6, 2021). தற்போது பொங்கல் பண்டிகைக்கு வழங்கப்பட இருக்கும் பைகளில், தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்று அச்சிடப்பட்டுள்ள செய்தி சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகிறது. இது வரவேற்கத்தக்கது.

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !*

# கருஞ்சட்டைத் தமிழர்

## அணைப் பாதுகாப்புச் சட்டம் !...?

“மக்களின் தேவைக்காக அமைக்கப்படுவதே அரசு” என்கிறார் சாக்கரடீஸ் என்பதைத் தன் “குடியரசு” நூலில் பதிவு செய்கிறார் பிளேட்டோ.

இதைச் சில மாநில அரசுகளும், ஒன்றிய அரசும் புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது.

ஒரு பக்கம் காவிரியின் குறுக்கே மேகதாது என்ற இடத்தில் புதிய அணை ஒன்றைக் கட்டியே தீருவோம் என்கிறது கர்நாடகம்.இதனால் இப்பொழுது வந்து கொண்டிருக்கும் பற்றாக்குறை நீரையும், வரவிடாமல் தடுக்கப் பார்க்கிறது அம்மாநில அரசு.

இன்னொரு பக்கம் முல்லைப் பெரியாறு அணை பலம் இழந்துவிட்டது, இடியப் போகிறது என்று சொல்லிச் சொல்லி அணையை இடித்துத் தள்ளக் குதித்துக் கொண்டிருக்கிறது கேரளம்.

தமிழக முதல்வர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள், அணையின் வலிமையை அது கட்டப்பட்ட காலத்தைக் கொண்டுப் பார்க்கக் கூடாது. அணையின் கட்டுமானம், பராமரிப்பு உள்ளிட்டவைகளைக் கொண்டு பார்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். ஆனாலும் கேரளம் குதிப்பதை விடவில்லை.

வேளாண் நிலங்கள், குடிநீர் பயன்பாட்டிற்காகக் கட்டப்படும் அணை குறித்த உரிமை அந்தந்த மாநிலத்திற்கே உரியது. அது பிற மாநிலங்களைப் பாதிக்கக் கூடாது. இவைகளை எல்லாம் இன்றைய ஒன்றிய அரசால் தீர்த்து வைக்க முடியவில்லை. ஆனால் மாநில உரிமைகளைப் படிப்படியாகப் பிடுங்கும் வேலையை மட்டும் செய்து வருகிறது.

அண்மையில் அணைப் பாதுகாப்புச் சட்ட முன்வடிவு நாடாளுமன்ற இரு அவைகளிலும் கொண்டு வரப்பட்டது.

அதன் மீதான விவாதத்தில் தி.மு.க சார்பில் திருச்சி சிவா, டி.கே.எஸ்.இளங்கோவன், ம.தி.மு.க சார்பில் வைகோ, அ.தி.மு.க சார்பில் நவநீதகிருஷ்ணன் உள்ளிட்ட உறுப்பினர்களும், காங்கிரஸ், திருணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளும் இச்சட்ட முன்வடிவை எதிர்த்துப் பேசியுள்ளார்கள்.

ஆனாலும் தனக்கிருக்கும் உறுப்பினர்கள் பலத்தை வைத்து அதை சட்ட மாக்கிக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி விட்டது பா.ஜ.க. ஒன்றிய அரசு. இதன் மூலம் மக்கள் பிரதிநிதிகளான அவை உறுப்பினர்களையும் அவர்களின் பேச்சையும், எதிர்ப்பையும் கூட மதிக்காமலும், கனிவுடன் பார்க்கவும் மறுக்கிறது பா.ஜ.க. ஒன்றிய அரசு.

நாட்டின் பன்மைத்துவத்தை மறுத்து, அத்வைதம் போல ஒருமைக் கோட்பாட்டை, சனாதன ‘ ராமராஜ்ய’த்தை அமைக்கத் துடிக்கும் இந்துத்துவ சக்திகளின் பின்னணியில் இருந்து கொண்டு, மாநில அரசுகளின் உரிமைகளைப் பறிக்கும் சர்வாதிகாரத்தைத் தவிர்த்துக் கொண்டு மக்களின் அரசாக, மாநிலங்களின் உரிமைகளில் தலையிடாத அரசாக எஞ்சி இருக்கும் ஆண்டுகளை ஒன்றிய பா.ஜ.க அரசு நிறைவு செய்ய வேண்டும் என்பதே மக்களின் விருப்பமும், எதிர்பார்ப்பும் ஆகும் !

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை


இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024.கொலைபேசி: 044-2472 6408

நூல் அறிமுகம்

# திரும்பத் திரும்பத் திராவிடம் பேசுவோம்!

**வெற்றிச்செல்வன்**

"நான்தான் திராவிடன் என்று நவில்கையில், தேன்தான் நாவெலாம்! வான்தான் என்புகழ்!" என்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். திராவிடம் ஒரு பயன்மரம். அத்திராவிடப் பயன்மரத்தின் கனிகளைப் பெற்றவர்களுக்கும், பயனை உணர்ந்தவர்களுக்கும் திராவிடம் தேன்போலத் தித்திக்கும். ஆனால் அப்பயன்மரத்தின் நிழலை அனுபவித்துக் கொண்டே அதன் அடிவேரை அசைத்துப் பார்க்க நினைப்பவர்களுக்கோ அது எட்டிக் காயாய்க் கசக்கும்.




திராவிடம் தமிழ்ச்சொல்லா?! தமிழரா, திராவிடரா? திராவிடமா, தமிழ்த்தேசியமா? என்றெல்லாம் பிதற்றிக் கொண்டிருக்கும் முகநூல் போராளிகளுக்கெல்லாம் முதலுதவி போல வந்திருக்கிறது இந்நூல். "திராவிடம்" என்ற சொல்லை அழிக்க ஆரியமும், போலித் தமிழ்த்தேசியமும் கள்ளக்கூட்டு வைத்துள்ள இன்றைய சூழலில், 'திரும்பத் திரும்பத் திராவிடம் பேசுவோம்' என்ற தலைப்பே அவர்களுக்குச் சவுக்கடி.

தமிழ் - தமிழன் தமிழ்நாடு ஆகிய மூன்றுக்காகவும் முக்கால் நூற்றாண்டுக்காலம் எழுதியும் பேசியும் செயல்பட்ட தமிழ்த்தேசியரே தந்தை பெரியார் என்று தொடங்கும் இந்நூல் திராவிட இயக்கத்தினால் விளைந்த பயன்களை ஆயிரக்கணக்கான சான்றுகளில் அள்ளித் தருகிறது.

ஒரு தமிழ்த்தேசியர் எதைப் பேச வேண்டுமோ அவை அனைத்தையும் பேசிய ஒரே தமிழ்த்தேசியர் தந்தை பெரியார் மட்டும்தான் (பக்கம் 10) என்ற வரிகள், இன்று தமிழ்த்தேசியத்திற்கு வரி வரியாகப் பொய்யான பொழிப்புரை எழுதிக் கொண்டிருக்கும் மணியரசன்களை எட்ட நிறுத்துகிறது.

"பொருளாதார உலகமயமாக்கலை எதிர்ப்போர் நாம். ஆனால் பெரியாரிய உலமயமாக்கலை ஆதரிப்போர் நாம்! ஏனென்றால் பெரியாரியம் என்பது ஒரு இனத்துக்கு ஒரு மொழிக்கு ஒரு மாநிலத்துக்கு ஒரு நாட்டுக்கு உரியதல்ல. அதற்குள் அடங்கிவிடக் கூடியதும் அல்ல அது உலகளாவியது. 'கடவுளை மற; மனிதனை நினை' என்பது அனைத்துலகுக்கும் பொதுவானது. 'மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு' என்பது அனைத்துலகுக்கும் பொதுவானது (உலகப்பன் கட்டுரை பக்கம் 21) என்கிற வரிகளில் எவ்வளவு உண்மை பொதிந்துள்ளது.

விடுதலை, உண்மை ஆகிய ஏடுகளின் பெருமித வரலாறு இலக்கிய நயத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் கண்ட போராட்டக் களங்கள் உணர்ச்சிப் பெருக்கோடு விவரிக்கப்பட்டுள்ளன. அண்ணா, கலைஞர் என்ற இருபெரும் ஆளுமைகளைப் பற்றிய எழுத்தோவியங்கள், அவர்களை நமது கண்ணின் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றன.

பேராசிரியர், நாவலர் ஆகியோரைப் பற்றிய புகழாரங்கள் சில பக்கங்கள் என்றால், தினமணி, ஜெயமோகன் புரட்டுகளுக்குப் பதிலடிகள் சில பக்கங்கள்!

"திராவிடம் என்றால் எரிகிறதா?" என்ற கட்டுரை, திராவிட எதிர்ப்பாளர்களுக்குத் தீரா விடம். 'திராவிடம்' என்ற சொல் எதற்காகப் பயன்படுகிறது என்றால் குருமூர்த்தி முதல் மாலன் வரை எச். ராஜாக்கள் முதல் பத்ரிகள் வரை எந்தச் சொல்லைச் சொன்னால் அவர்களுக்கு எரிச்சல் வருகிறதோ அந்தச் சொல் என்பதற்காகவே!' (பக்கம் 88) என்ற விளக்கம் காலத்தே வெளியிடப்பட்டிருக்கும் கருத்து.

'திராவிடத்தின் உள்ளடக்கம் தமிழ்த்தேசியமே' என்ற கட்டுரை ஆகச் சிறந்த ஆய்வுத் தொகுப்பு. கலைஞரின் வெற்றிச் சூத்திரம் 471 என்பதற்கான விளக்கம் படிப்பதற்கு ஆவலைத் தூண்டுவது.

இந்து சமய அறநிலையத்துறை குறித்த கட்டுரையில் தரப்பட்டுள்ளப் புள்ளி விவரங்கள் நம்மை வியக்க வைக்கும். புரட்டர்களையோ வாயடைக்க வைக்கும்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு வெற்றி நடை போடும் மாட்சியை அளக்கிறது ஒரு கட்டுரை! "எந்த அலையையும் இனி மு.க. ஸ்டாலின் என்ற மலை தடுக்கும்!" என்ற வரி நம்பிக்கையை விதைக்கிறது.

*"Stalin is more dangerous than Karunanidhi"* என்ற வார்த்தைகளைக் கேட்கும் போது காதில் தேன் பாய்கிறது! *'once more'* என்று கேட்கத் தோன்றுகிறது. திராவிடக் கொள்கையின் வாரிசுகள் எல்லாம் எப்போதும் *dangerous* தான்!" என்ற வரிகளோடு நிறைவடைகிறது இந்நூல்.

திராவிடர்களுக்குத் தின்னத் தின்னத் திகட்டாத தெள்ளமுது இந்நூல்

●

நூலின் பெயர்: **திரும்பத் திரும்பத் திராவிடம் பேசுவோம்**

நூல் ஆசிரியர்: **ப. திருமாவேலன்**

வெளியீடு : **கருஞ்சட்டைப் பதிப்பகம்,
120, என்.டி.ஆர் தெரு, ரங்கராசபுரம்,
கோடம்பாக்கம், சென்னை - 24**

இணையதளம்:
www.karunchattaibooks.com

பக்கங்கள் : 240

விலை : 230